©
தமிழ் நாடு அரசு
2015

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 0.80 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 17] சென்னை, புதன்கிழமை, ஏப்ரல் 29, 2015
சித்திரை 16, மன்மத, திருவள்ளுவர் ஆண்டு–2046

# பகுதி II—பிரிவு 2 இன் இணைப்பு

## அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

### தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

**திருத்த அறிவிக்கை**

*[அரசாணை (2D) எண் 4, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, நாள்: 12 பிப்ரவரி 2015.]*

1948ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி, 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், 12–12–2012 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II—பிரிவு, 2–இல் 725 முதல் 729 வரையிலான பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் II(2)/தொ.வே.வா/839/2012 ஆம் எண் அறிவிக்கையில் பின்வரும் திருத்தத்தை இதனால் செய்கிறார்.

**திருத்தம்**

மேற்சொன்ன அறிவிக்கையில், ''விவர அட்டவணை–1'' என்பதன் கீழ்வரும் ''பாத்திரங்கள் (சமையல் பாத்திரங்கள்) தயாரித்தல் தொழிலில் வேலைவாய்ப்பு:'' என்ற தலைப்பின் கீழ் வரும் ''1. தொழிற்சாலை வளாகத்தினுள் பித்தளைப் பாத்திரங்கள் தயாரிப்பில் ஈடுபடும் தொழிலாளர்களுக்காக'' என்ற துணைத்தலைப்பின் கீழ், நெடும்பத்தி (1) இல் தொடர் எண்கள் 32 மற்றும் 33 மற்றும் நெடும்பத்தி 2, 3(அ), 3(ஆ), 3(இ) ஆகியவற்றின் நிகரான பதிவுகளில் பின்வருவனவற்றை முறையே பதிலிட்டுக் கொள்ள வேண்டும்''. அவையாவன:-

| | | | |
|---|---|---|---|
| ''32. | நாளிகம்: | | |
| (அ) | பித்தளை நாளிகம் – | கி.கி. ஒன்றுக்கு | 41.16—14.77 |
| (ஆ) | பித்தளை வெள்ளை நாளிகம்– | கி.கி. ஒன்றுக்கு | 23.01—14.77 |
| 33 | தெப்பு பித்தளை நாளிகம்– | கி.கி. ஒன்றுக்கு | 46.01—14.77.'' |

(மேற்காணும் மூன்று இனங்களுக்கும் ஒவ்வொரு கிலோ கிராமுக்கும் 15 கிராம் சேதாரம் அனுமதிக்கப்படுகிறது).

**எம். வீர சண்முக மணி,**
*அரசு செயலாளர்.*

*(தமிழாக்கம்)*

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

DTP-II-2-17 (T Sup)—1